# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1946 - 2015 දෙසැම්බර් මස 18 වැනි සිකුරාදා - 2015.12.18**

*1946 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 1980 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - |
| உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1983 |
| அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| ஏல விற்பனைகள் | 1987 |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2016, சனவரி மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, திசெம்பர் மாதம் 23 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யு. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## இலங்கைப் புகையிரத சேவைகள்

பாவனைக்கொவ்வாத பயணிகள் பெட்டிகள், சரக்குப் பெட்டிகள், என்ஜின்கள் மற்றும் லொக்கொமோட்டிவ்கள் ஆகியவற்றை அகற்றுதலுக்கான பெறுகை அறிவித்தல்

**பெறுகை இல. SRS/F.7297**

கொழும்பு 10, ஒல்கட் மாவத்தை, புகையிரதத் தலைமையகம், இலங்கைப் புகையிரத சேவைகள் திணைக்கள பெறுகைக் குழுவின் (உயர் மட்டம்) தலைவர், பாவனைக்கொவ்வாத பயணிகள் பெட்டிகள், சரக்குப் பெட்டிகள், என்ஜின்கள் மற்றும் லொக்கொமோட்டிவ்கள் ஆகியவற்றை அகற்றுவதற்காக அரக்கு முத்திரையிடப்பட்ட விலைமனுக்களைப் பெற்றுக்கொள்வார்.

அமைவிடங்கள் பின்வருமாறு :

| விபரம் | அமைவிடங்கள் | நிறை (அண்ணளவாக) |
|---|---|---|
| பாவனைக்கொவ்வாத சரக்குப் பெட்டிகள் | இரத்மலானை திறந்தவெளி | 85.50 மெ. தொன் |
| பாவனைக்கொவ்வாத என்ஜின்கள் | இரத்மலானை திறந்தவெளி | 158.50 மெ. தொன் |
| பாவனைக்கொவ்வாத பயணிகள் பெட்டிகள் | மாளிகாவத்தை | 42.00 மெ. தொன் |
| லொக்கொமோட்டிவ்கள் | 26 ஆம் இலக்க திறந்த கூடாரம், தெமட்டகொடை | 210.00 மெ. தொ. |
| மொத்தம் | | 496.00 மெ. தொன் (மெ. தொ. என்பது மெற்றிக் தொன்னைக் குறிக்கும்) |

2. 2015.12.30 ஆந் திகதி பி. ப. 2.00 மணிக்கு விலைமனுக்கள் மூடப்படும்.

3. மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமான 10,000 ரூபாவை (பத்தாயிரம் ரூபா மாத்திரம்) புகையிரத சேவைகளின் பிரதம கணக்காளரிடம் செலுத்திய பின்னர் 2015.12.29 ஆந் திகதி பி. ப. 3.00 மணி வரை கொழும்பு 10, புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. கொழும்பு 10, ஒல்கட் மாவத்தை, புகையிரத தலைமையகத்தில் விலைமனுக்களை மூடிய உடனடியாகவே அவைகள் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களைத் திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

5. அரக்கு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படலாம் அல்லது நேரடியாகவே ஒப்படைக்கப்படலாம் :

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு (உயர் மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்,
புகையிரத தலைமையகம்,
ஒல்கட் மாவத்தை,
கொழும்பு 10.

6. கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் இலவசமாக விலைமனுக் கோரல் ஆவணங்களைப் பரீட்சிக்கலாம்.

7. மேலதிக விபரங்களுக்கு.- தயவுசெய்து கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலைகள் திணைக்களம், புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகருடன் தயவுசெய்து தொடர்புகொள்ளவும் :-

தொலைபேசி இலக்கங்கள் : 2438078, 2436818.
தொலைநகல் இல. : 2432044.
மின்னஞ்சல் : srs.slr@gmail.com
இணையத்தளம் : www.slrail.info

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு (உயர் மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்.

குறியீட்டு இல. SRS/F.7297

12-601

**இலங்கைப் புகையிரத சேவைகள்**

இறம்புக்கன கிரிவள்ளபிட்டியவிலுள்ள பாவனைக்கொவ்வாத பெட்டிகளை அகற்றல் சம்பந்தமான பெறுகை அறிவித்தல்

**பெறுகை இல. SRS/F.7245**

கொழும்பு 10, ஒல்கட் மாவத்தை, புகையிரத தலைமையகம், இலங்கைப் புகையிரத சேவைகள் திணைக்கள பெறுகைக் குழுவின் (உயர் மட்டம்) தலைவர், இறம்புக்கன-கிரிவள்ளபிட்டியவிலுள்ள பாவனைக்கொவ்வாத பெட்டிகளை அகற்றுவதற்காக அரக்கு முத்திரையிடப்பட்ட விலைமனுக்களைப் பெற்றுக்கொள்வார்.

2. 2016.01.08 ஆந் திகதி பி. ப. 2.00 மணிக்கு விலைமனுக்கள் மூடப்படும்.

3. மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமான 3,000 ரூபாவை (மூவாயிரம் ரூபா மாத்திரம்) புகையிரத சேவைகளின் பிரதம கணக்காளரின் அலுவலகத்தில் செலுத்திய பின்னர் 2016.01.07 ஆந் திகதி பி. ப. 3.00 மணி வரை கொழும்பு 10, புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, இலங்கைப் புகையிரத தலைமையகத்தில் விலைமனுக்களை மூடிய பின்னர் உடனடியாகவே அவைகள் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களைத் திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

5. அரக்கு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படலாம் அல்லது நேரடியாகவே ஒப்படைக்கப்படலாம் :

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு (உயர் மட்டம்),
இலங்கை புகையிரத சேவைகள்,
புகையிரத தலைமையகம்,
ஒல்கட் மாவத்தை,
கொழும்பு 10.

6. கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் விலைமனுக் கோரல் ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம்.

7. மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து "கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலைகள் திணைக்களம், புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகர்" தயவுசெய்து தொடர்புகொள்ளவும். தொலைபேசி இலக்கங்கள் : 2438078, 2436818 ; தொலைநகல் இல. : 2432044.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு (உயர் மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்.

குறியீட்டு இல. SRS/F.7245

12-626

---

**இலங்கைப் புகையிரத சேவைகள்**

கொழும்பு புகையிரத திறந்த வெளியிலிருந்து பாவனைக்கொவ்வாத பயணிகள் பெட்டிகள் மற்றும் சரக்குப் பெட்டிகளையும் இரத்மலானை புகையிரத திறந்த வெளியிலிருந்து பொதுவான இரும்பு சிதைவுகளையும் அகற்றுவதற்கான பெறுகை அறிவித்தல்

**பெறுகை இல. SRS/F.7300**

கொழும்பு 10, ஒல்கட் மாவத்தை, புகையிரத தலைமையகம், இலங்கைப் புகையிரத சேவைகள் திணைக்கள பெறுகைக் குழுவின் (உயர் மட்டம்) தலைவர், கொழும்பு புகையிரத திறந்த வெளியிலிருந்து பாவனைக்கொவ்வாத 175.50 மெ. தொ. பயணிகள் பெட்டிகள் மற்றும் சரக்குப் பெட்டிகளையும் இரத்மலானை புகையிரத திறந்த வெளியிலிருந்து 400 மெ. தொ. பொதுவான இரும்புச் சிதைவுகளையும் அகற்றுவதற்காக அரக்கு முத்திரையிடப்பட்ட விலைமனுக்களைப் பெற்றுக்கொள்வார்.

2. 2015.12.29 ஆந் திகதி பி. ப. 2.00 மணிக்கு விலைமனுக்கள் மூடப்படும்.

3. மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமான 10,000 ரூபாவை (பத்தாயிரம் ரூபா மாத்திரம்) புகையிரத சேவைகளின் பிரதம கணக்காளரிடம் செலுத்திய பின்னர் 2015.12.28 ஆந் திகதி பி. ப. 3.00 மணி வரை கொழும்பு 10, புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. கொழும்பு 10, ஒல்கட் மாவத்தை, புகையிரத தலைமையகத்தில் விலைமனுக்களை மூடிய பின்னர் உடனடியாகவே அவைகள் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களைத் திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

5. அரக்கு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படலாம் அல்லது நேரடியாகவே ஒப்படைக்கப்படலாம் :

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு (உயர் மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்,
புகையிரத தலைமையகம்,
ஒல்கட் மாவத்தை,
கொழும்பு 10.

6. கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் விலைமனுக் கோரல் ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம்.

7. மேலதிக விபரங்களுக்கு.- 2432044, 2436818 ஆகிய தொலைபேசி எண்களினூடாக கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலைகள் திணைக்களம், புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகருடன் தயவுசெய்து தொடர்புகொள்ளலாம்.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு (உயர் மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்.

குறியீட்டு இல. SRS/F.7300

12-602

---

**இலங்கைப் புகையிரத சேவைகள்**

பாலத்தின் பாவனைக்கொவ்வாத சிதைவுகளை அகற்றுதலுக்கான பெறுகை அறிவித்தல்

**பெறுகை இல. SRS/F.7290**

கொழும்பு 10, ஒல்கட் மாவத்தை, புகையிரத தலைமையகம், இலங்கைப் புகையிரத சேவைகள் திணைக்கள பெறுகைக் குழுவின் (உயர் மட்டம்) தலைவர், பாலத்தின் பாவனைக்கொவ்வாத சிதைவுகளை அகற்றுவதற்காக அரக்கு முத்திரையிடப்பட்ட விலைமனுக்களைப் பெற்றுக்கொள்வார். அமைவிடங்கள் மற்றும் கையிருப்பிலுள்ள அளவைகள் பின்வருமாறு :

| | அமைவிடங்கள் | அளவை (அண்ணளவாக) |
|---|---|---|
| 1 | மடுவின் கற்களை துண்டாக்கும் இடத்திலுள்ள பாலத்தின் பாவனைக்கு ஒவ்வாத சிதைவுகளை அகற்றல் | 327.9 மெ. தொ. (அண்ணளவாக) |
| 2 | மதவாச்சிமடு செயற்திட்டப் பாலத்தின் பாவனைக்கொவ்வாத சிதைவுகளை அகற்றல் | 232.38 மெ. தொ. (அண்ணளவாக) |
| 3 | 50 மைல் 35 சங்கிலி மற்றும் 53 மைல் 31 சங்கிலி இடத்திலுள்ள பாலத்தின் பாவனைக்கொவ்வாத சிதைவுகளை அகற்றல் | 120.00 மெ. தொ. (அண்ணளவாக) |
| | மொத்தம் | 680.28 மெ. தொ. (அண்ணளவாக) |

1 தொடக்கம் 3 வரையிலான உருப்படிகள் மதிப்பீடு செய்யப்பட்டு தனித்தனியாக ஒப்பந்தம் வழங்கப்படும்.

2. 2016.01.05 ஆந் திகதி பி. ப. 2.00 மணிக்கு விலைமனுக்கள் மூடப்படும்.

3. மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமான 5,000 ரூபாவை (ஐயாயிரம் ரூபா மாத்திரம்) புகையிரத சேவைகளின் பிரதம கணக்காளரின் அலுவலகத்தில் செலுத்திய பின்னர் 2016.01.04 ஆந் திகதி பி. ப. 3.00 மணி வரை கொழும்பு 10, புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. கொழும்பு 10, ஒல்கட் மாவத்தை, புகையிரதத் தலைமையகத்தில் விலைமனுக்களை மூடிய பின்னர் உடனடியாகவே அவைகள் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களைத் திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

5. அரக்கு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படலாம் அல்லது நேரடியாகவே ஒப்படைக்கப்படலாம் :

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு (உயர் மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்,
புகையிரத தலைமையகம்,
ஒல்கட் மாவத்தை,
கொழும்பு 10.

6. கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் விலைமனுக் கோரல் ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம்.

7. மேலதிக விபரங்களுக்கு.- 2438078, 2436818 ஆகிய தொலைபேசி எண்களினூடாக கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலைகள் திணைக்களம், புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகருடன் தயவுசெய்து தொடர்புகொள்ளவும்.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு (உயர் மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்.

குறியீட்டு இல. SRS/F.7290

12-627

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனிகள் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : மொஆ லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 109615
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2015.11.13
*பதிவுசெய்யப்பட்ட முகவரி* : இல. 27/ 1, மைந் ஸ்ட்ரீட், மொரடுவெல்ல, மொரட்டுவ

டபிள்யூ. எஸ். வீரமன்,
கம்பனிச் செயலாளர்.

இல. 27/1, பெப்பிலியான வீதி, நெதிமாலை,
தெஹிவளை.

12-612

## கம்பனியின் இறுதிப் பொதுக்கூட்டம், கடன் கொடுத்தோர் கூட்டம் மற்றும் கம்பனி கலைத்தலுக்குமான அறிவித்தல்

டிஎன்பி ஸ்போர்ட்ஸ்வெயார்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
(கடன் கொடுத்தோர் தன்னிச்சையான ஒடுக்குதல்)

**கம்பனியின் பதிவு இல. பீவீ 13519**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 341(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனியின் கலைப்புக்கு முந்திய இறுதிப் பொதுக்கூட்டம் மற்றும் கடன் கொடுத்தோர் கூட்டம் என்பன 2016 ஆம் ஆண்டு தை மாதம் 22 ஆந் திகதி பிற்பகல் 4.00 மணியளவில் கொழும்பு 4, மக்லியட் வீதி, இல. 22 இல் அமைந்துள்ள சோமேஸ்வரன் சென்ரர் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தில் நடைபெறவுள்ளது. மேற்படி கூட்டமானது கலைத்தலுக்கான கணக்கு விபரங்களை அங்கத்தவர்களுக்குச் சமர்ப்பிப்பதற்காக கூட்டப்படுகின்றது. அது,

(1) ஒடுக்குதல் எவ்வாறு நடைபெற்றது,
(2) கம்பனியின் சொத்துக்கள் ஏதுமிருப்பின் அவற்றை விற்று ஒதுக்கிய முறை, மற்றும்
(3) இவை பற்றிய விளக்கம் அளித்தல்

கீதாஞ்சலி குணசேகரம்,
கலைப்பாளர்.

டிஎன்பி ஸ்போர்ட்ஸ் வெயார்ஸ் லங்கா
(பிறைவேட்) லிமிட்டெட்
2015, மார்கழி 01.

12-625

## வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்றின் கூட்டிணைப்பு பற்றிய பகிரங்க அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ், ஹேலீஸ் ருவர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் எனும் கம்பனி 2015, ஒற்றோபர் 23 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : ஹேலீஸ் ருவர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 109333

*பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்* : இல. 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2015, ஒற்றோபர் 23

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ஹேலீஸ் குரூப் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 400, டீன்ஸ் வீதி,
கொழும்பு 10,
2015, நவெம்பர் 18.

12-630

---

**பகிரங்க அறிவித்தல்**

கன்டோர் அஸ்ஸட் மெனேஜ்மென்ட் (பிறைவேட்) லிமிட்டெட் (Candor Asset Management (Private) Limited (பதிவுசெய்யப்பட்ட இலக்கம் பீவீ 75997) அதன் குறிப்பிடப்பட்ட மூலதனத்தை நூற்றெட்டு மில்லியன் ரூபாவிலிருந்து நாற்பத்தைந்து மில்லியன் ரூபாவாக குறைப்பதற்கு உத்தேசித்துள்ளதென 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 59(2) ஆம் பிரிவின்கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கோர்ப்பரேட் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

12-668

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : டி. கே. இம்பெக்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 109756
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2015.11.12
*பதிவு முகவரி* : 26/4, 1 ஆம் ஒழுங்கை, பன்னிப்பிட்டிய வீதி, பத்தரமுல்ல

ஆர். எம். எஸ். பி. மெதவல,
பணிப்பாளர்.

12-493

---

**பகிரங்க அறிவித்தல்**

டீ பி கே என்டர்பிரைசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனிகூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

டீ பி கே என்டர்பிரைசஸ் (பிறைவேட்) லிமிட்டெட் எனும் பெயரில் புதிய கம்பனியொன்று 2015 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 13 ஆந் திகதி பீவீ 109799 எனும் இலக்கத்தின் கீழ், கூட்டிணைக்கப்பட்டுள்ளது என்பதையும் புதிய கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தின் விலாசமானது கொழும்பு 3, டீல் பிளேஸ், இல. 2, எம் அன்ட் என் கட்டிடம் (5 ஆம் மாடி) இல் அமைந்துள்ளது என்பதையும் இத்தால் நாம் பகிரங்க அறிவித்தல் தருகிறோம்.

சரவணன் நீலகண்டன்,
பணிப்பாளர்,
என் அன்ட் என் ஏஜென்ஸ் அன்ட் செக்ரட்டரீஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

எம் அன்ட் என் கட்டிடம் (5 ஆம் மாடி),
டீல் பிளேஸ்,
கொழும்பு 3.

12-545

---

**பகிரங்க அறிவித்தல்**

324 காலி வீதி (பிறைவேட்) லிமிட்டெட்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனிகூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

324 காலி வீதி (பிறைவேட்) லிமிட்டெட் எனும் பெயரில் புதிய கம்பனியொன்று 2015 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 23 ஆந் திகதி பீவீ 109954 எனும் இலக்கத்தின் கீழ், கூட்டிணைக்கப்பட்டுள்ளது என்பதையும் புதிய கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தின் விலாசமானது கொழும்பு 1, உலக வர்த்தக மையம், கிழக்குக் கோபுரம், 16 ஆவது மாடியில் 3 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ளது என்பதையும் இத்தால் நாம் பகிரங்க அறிவித்தல் தருகிறோம்.

சரவணன் நீலகண்டன்,
பணிப்பாளர்,
என் அன்ட் என் ஏஜென்ஸ் அன்ட் செக்ரட்டரீஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

எம் அன்ட் என் கட்டிடம் (5 ஆம் மாடி),
இல. 2, டீல் பிளேஸ்,
கொழும்பு 3.

12-546

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : நொலங்கா புரோகிரஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

*பதிவு இலக்கம்* : பீவீ 109165
*பதிவு முகவரி* : இல. 231, நீர்கொழும்பு வீதி, வத்தளை

பணிப்பாளர்,
நொலங்கா புரோகிரஸ் (பிறைவேட்) லிமிட்டெட்.

12-468

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : நிபோன் ஒடோ கெயார் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 109416
*கூட்டிணைப்புத் திகதி* : 2015.10.28
*பதிவு முகவரி* : இல. 24எப், கிழக்குக் கோபுரம், உலக வர்த்தக மையம், கொழும்பு 1

12-469

---

**அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்**

பெயிலிவல, தன் அல்ல, கென்தஹேனவத்த, இல. 459/ ஏ இல் வதியும் விதான ஆரச்சிலாகே தொன் நலின் புஷ்பகுமார பெரேரா (தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் 681160647V) ஆகிய எனக்கு பிரசித்த நொத்தாரிசு எச். ரீ. ஜீ. கே. பண்டார அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2014 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 24 ஆந் திகதிய 544 ஆம் இலக்கம் கொண்ட இலங்கைப் பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் எழுத்துமூல அதிகாரம் மற்றும் அற்றோணித் தத்துவப் பதிவேட்டின் 126 ஆம் தொகுதியின் 68 ஆம் பக்கத் தாளில் 9658 ஆம் இலக்க நாட்பதிவேட்டு இலக்கத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட விசேட அற்றோணித் தத்துவத்தின் அற்றோணி தத்துவதாரராகிய மேலே பெயர் குறிப்பிடப்பட்ட நான், இது முதற்கொண்டு கூறப்பட்ட விசேட அற்றோணித் தத்துவத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்களை நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்படவில்லை எனவும், ஆகையால் இதன் மூலம் அதனை இல்லாதொழிக்கப்படுகின்றதெனவும் இது முதற்கொண்டு கூறப்பட்ட விசேட அற்றோணித் தத்துவ சட்டத்தின் மூலம் வலுவற்றதாக்கப்பட்டு வெறிதாக்கப்பட்ட ஆவணமொன்றாக இத்தால் அனைவருக்கும் வெளிப்படுத்தி அறிவித்துக்கொள்கின்றேன்.

விதான ஆரச்சிலாகே தொன் நலின் புஷ்பகுமார பெரேரா.

12-613

---

**அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்**

புத்தளம் மாவட்டத்தில், நாத்தாண்டிய தபால் பிரிவு, மாவில நிசாந்த வீட்டில் வசிக்கும் சந்தியா குமாரி சூரிய ஆரச்சி ஆகிய நான் மாரவில, நாத்தாண்டிய வீதியில் வசிக்கும்க டீ. எச். எச். ஜயசிங்க நீதிவான் மற்றும் பிரசித்திபெற்ற நொத்தாரிசுவினால் 2010.03.15 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட 13979 ஆம் இலக்க விசேட அற்றோணித் தத்துவத்தால் நாத்தாண்டிய, மாவில இல் வசிக்கும் நிஷாந்த பிரிய தர்ஷினி சூரிய ஆரச்சி என்பவர் எனது சட்ட ரீதியான அற்றோணித் தத்துவக்காரராக நியமிக்கப்பட்டிருந்தார். அந்த அற்றோணித் தத்துவத்தை இப்பொழுது முதல் இரத்துச்செய்து செயலாக்கப்பட்டுள்ளது என்பதனை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அனைத்துப் பிரசைகளுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன். அதற்கமைய இந்த அற்றோணித் தத்துவத்தினால் செய்யப்படுகின்ற எந்தவித நடவடிக்கைகளுக்கும் நான் பொறுப்பாக மாட்டேன்.

சந்தியா குமாரி சூரியஆரச்சி.

12-513

---

**அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்**

களனி, ஈரியவெட்டிய, ஆர். ஏ. பெர்னாண்டோ மாவத்தை, இல. 511/ஜீ எனும் முகவரியில் வசிக்கும் ஹதுருசிங்க தேவகே தர்ஷன புஷ்ப குமார (தேசிய ஆள் அடையாள அட்டை இல. 600211897V) ஆகிய அற்றோணிதாரரான என்னால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு, களனி, பெதிவியாதுடுவ, இல. 77 எனும் முகவரியில் வசிக்கும் சுதுவா தேவகே லயனல் (தேசிய ஆள் அடையாள அட்டை இல. 562102280V) என்பவருக்கு பிரசித்த நொத்தாரிசு ஐ. மல்லிகா சுபசிங்க அவர்களால் 2007.11.26 ஆந் திகதி எழுதி உறுதிசெய்யப்பட்ட 4868 ஆம் இலக்க அற்றோணித் தத்துவப்பத்திரம் மூலமாக வழங்கப் பட்டிருந்த எனது சார்பாக செயற்படும் அதிகாரம் இன்று தொடக்கம் இரத்துச்செய்யப்படும் என அனைவருக்கும் இதன் மூலம் அறிவித்தல் தருகிறன்.

ஹதுருசிங்க தேவகே தர்ஷன புஷ்ப குமார.

12-496

---

**அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு, இல. 650ஏ, சுபுதி மாவத்தை, பத்தரமுல்லையைச் சேர்ந்த ஹேமந்த குமுதுனி ஜலத் ஏகநாயக்க (தேசிய ஆள் அடையாள அட்டை இல. 725330359V) ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு சுதர்மா ராஜபத்திரண அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு மத்திய மாகாணத்தின், மாகாணப் பதிவாளர் பொது அலுவலகத்தில் 2006.05.17 ஆந் திகதி பதிவேடு இல. 6279 இன் 73/328 ஆம் பக்கத்தில் பதிவுசெய்யப்பட்ட 178 ஆம் இலக்கத்தைக் கொண்ட 2006.04.17 ஆந் திகதியிடப்பட்ட அற்றோணித் தத்துவத்தில் இல. 161/ 7, பிட்டிபன வடக்கு, ஹோமாகம எனும் முகவரியைச் சேர்ந்த ரத்னாயக்க முதியன்சலாகே சேனபால சரத்குமார என்பவரை எனது உண்மையானதும் சட்ட ரீதியானதுமான தத்துவக்காரராக எனும் விடயங்களையும் அலுவல்களையும் கவனிக்கவென நியமித் திருந்தேன் என்பதனையும் மேலே குறிப்பிடப்பட்டவாறான இலங்கை ஹோமாகமையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு சுதர்மா ராஜபத்திரணவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 178 ஆம் இலக்கத்தைக் கொண்ட 2006.04.17 ஆந் திகதியிடப்பட்ட அற்றோணித் தத்துவம் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுகிறது என்பதனை நான் பொது மக்களுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் இத்தால் அறிவித்துக்கொள்கிறேன்.

மேலே குறிப்பிடப்பட்ட ரத்னாயக்க சேனபால சரத்குமார அவர்களினால் இதன் பின்னர் மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கைக்கும் நடவடிக்கைகளுக்கும் நான் பொறுப்பாக மாட்டேன் என்பதனை இத்தால் பிரகடனப்படுத்திக்கொள்கிறேன்.

ஹேமந்த குமுதுனி ஜலத் ஏக்கநாயக்க.

12-523

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு, இல. 167/பி, பிட்டிபன வடக்கு, ஹோமாகமவைச் சேர்ந்த ரத்னாயக்க முதியன்சலாகே சுசந்த உதயகுமார (தேசிய ஆள் அடையாள அட்டை இல. 672953235V) ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு சுதர்மா ராஜபத்திரண அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு மத்திய மாகாணத்தின், மாகாணப் பதிவாளர் பொது அலுவலகத்தில் 2008.09.05 ஆந் திகதி பதிவேடு இலக்கம் 6280 இன் 18/1580 ஆம் பக்கத்தில் பதிவுசெய்யப்பட்ட 205 ஆம் இலக்கத்தைக் கொண்ட 2008.08.10 ஆந் திகதியிடப்பட்ட அற்றோணித் தத்துவத்தில் இல. 161/ 7, பிட்டிபன வடக்கு, ஹோமாகம எனும் முகவரியைச் சேர்ந்த ரத்னாயக்க முதியன்சலாகே சேனபால சரத்குமார என்பவரை எனது உண்மையானதும் சட்ட ரீதியானதுமான தத்துவக்காரராக எனும் விடயங்களையும் அலுவல்களையும் கவனிக்கவென நியமித்திருந்தேன் என்பதனையும் மேலே குறிப்பிடப்பட்டவாறான இலங்கை ஹோமாகமைவைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு சுதர்மா ராஜபத்திரணவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 205 ஆம் இலக்கத்தைக் கொண்ட 2008.08.10 ஆந் திகதியிடப்பட்ட அற்றோணித் தத்துவம் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுகிறது என்பதனை நான் பொது மக்களுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் இத்தால் அறிவித்துக்கொள்கிறேன்.

மேலே குறிப்பிடப்பட்ட ரத்னாயக்க சேனபால சரத்குமார அவர்களினால் இதன் பின்னர் மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கைக்கும் நடவடிக்கைகளுக்கும் நான் பொறுப்பாக மாட்டேன் என்பதனை இத்தால் பிரகடனப்படுத்திக்கொள்கிறேன்.

ரத்னாயக்க முதியன்சலாகே சுசந்த உதயகுமார.

12-524

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மொரட்டுவ, 'ஆசிரி உயன', ரம்யா பிளேஸ், இலக்கம் 5 இல் வசிக்கும் (தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் 280961523V) தர்மசேன பட்டியகும்புற ஆகிய நான், 2015, யூலை 6 ஆந் திகதி பிரசித்த நொத்தாரிசு பிரசன்ஸ அலாவத்த அவர்களால் உறுதிப்படுத்தப்பட்டவாறு அம்பாந்தோட்டை, இந்திவின்ன, இந்திரசிறி மாவத்தை, இல. 11/5 இல் வசிக்கும் (தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் 481363969V) எதிரிவீர சோமபால ஜயவர்தனவின் நியமனத்திற்குரிய 464 ஆம் இலக்க அற்றோணித் தத்துவத்தை 2015.12.02 ஆந் திகதியிலிருந்து இரத்துச்செய்து மீளப் பெறுவதுடன் மேற்கொண்டு எதிரிவீர சோமபால ஜயவர்தனவின் எந்தவித செயற்பாடுகளுக்கும் நான் பொறுப்பாளியல்ல என்பதையும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

தர்மசேன பட்டியகும்புற.

12-527

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

மொறட்டுவ, அங்குலான புகையிரத நிலைய வீதி, நவோத கார்டன், 118/ 6 ஆம் இலக்கத்திலுள்ள கஸ்தூரி ஆராய்ச்சிலாகே டொன் அஷோக்க பிரியந்த வீரசிங்க (தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் 773032963V) ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு அத்தநாயக்க முதியான்சலாகே பந்துல அத்தநாயக்க என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2008.06.25 ஆந் திகதியையும் 242 ஆம் இலக்கத்தை உடையதும் கஸ்தூரி ஆராய்ச்சிலாகே டொன் சன்டின் வீரசிங்க (தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் 362600731V) என்பவருக்கு என்னால் வழங்கப்பட்டதுமான விசேட அற்றோணித் தத்துவம் 2015.11.30 ஆந் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் வகையில் இல்லாதொழிக்கப்பட்டு இரத்துச் செய்யப்பட்டுள்ளது எனவும் அவரால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் எவ்வித செயலுக்கும் நான் பொறுப்பல்ல எனவும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.

கஸ்தூரி ஆராய்ச்சிலாகே டொன் அஷோக்க பிரியந்த வீரசிங்க.

12-564

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

ஹிந்தகல மஹகந்த பல்கலைக்கழக உத்தியோகபூர்வ இல்லத்தில் 9சீ ஆம் இலக்கத்தில் வசிக்கின்ற குருகுலசூரிய படபெதிகே லக்மன் ஷரிக் சில்வா ஆகிய என்னால் ஹிந்தகல மேல் பிரிவு, 391/4 ஆம் இலக்கத்தில் வசிக்கும் யட்டவர கெதர தினேஷ் நுவன் யட்டவர என்பவருக்கு கையளித்த அனுர பண்டார ஜயசுந்தரவினால் சான்றுப்படுத்தப்பட்ட 1101 ஆம் இலக்க அற்றோணித் தத்துவத்தை 2015, நவெம்பர் மாதம் 16 ஆந் திகதி இரத்துச்செய்யப்பட்டு விட்டதாக இலங்கை மக்களுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக்கு குடியரசுக்கும் அறியத்தருகின்றேன்.

குருகுலசூரிய படபெதிகே லக்மன் ஷரிக் சில்வா.

12-461

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

ஹிந்தகல மஹகந்த பல்கலைக்கழக உத்தியோகபூர்வ இல்லத்தில் 9சீ ஆம் இலக்கத்தில் வசிக்கின்ற குருகுலசூரிய படபெதிகே லக்மன் ஷரிக் சில்வா ஆகிய என்னால் ஹிந்தகல மஹகந்த பல்கலைக்கழக உத்தியோகபூர்வ இல்லத்தில் இல. சீ09 இல் வசிக்கும் அதுல சேனாரத்ன என்பவருக்கு கையளித்த கண்டி பிரசித்த நொத்தாரிசு ஜே. எம். ஏ. பீ. ஜயசுந்தரவினால் சான்றுப்படுத்தப்பட்ட 1008 ஆம் இலக்க அற்றோணித் தத்துவத்தை 2015, நவெம்பர் மாதம் 16 ஆந் திகதி இரத்துச்செய்யப்பட்டு விட்டதாக இலங்கை மக்களுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக்கு குடியரசுக்கும் அறியத்தருகின்றேன்.

குருகுலசூரிய படபெதிகே லக்மன் ஷரிக் சில்வா.

12-460

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

நீர்கொழும்பு, இல. 30, 5 ஆம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த முருகுலசூரிய இமானுவல் எலனர்ட் பீரிஸ் ஆகிய நான் (தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் 5632319663V) இலங்கைச் சனநாயக சோசலிசக்

குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருவதாவது, மஹிந்துகுலசூரிய முதுபடன பேராதொடகே மரீனட் பிரியங்க பர்னாந்து எனது அற்றோணிதாரர் என்றும் 2015, யூலை 20 ஆந் திகதியன்று வெளிநாட்டு அற்றோணி அதிகாரத்திற்காக ஐக்கிய அமெரிக்க குடியரசில் கைச்சாத்திடப்பட்ட அற்றோணித் தத்துவம் 2015, ஓகத்து 12 ஆந் திகதியன்று இலங்கையில் பதிவாளராக பொதுப் பதிவாளர் நாயக அலுவலகத்தில் கைச்சாத்திடப்பட்ட அற்றோணித் தத்துவமும் மேற்கூறப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் இரத்துச்செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்பட்டு விட்டதாக இத்தால் அறியத்தருகின்றேன்.

முருகுலசூரிய இமானுவல் எலனர்ட் பீரிஸ்.

*12-589*

**அறிவித்தல்**

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் முன்னைய பெயர்* : சென் லங்கா டெஸ்டிநேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் புதிய பெயர்* : ஹில் கொடேஜ் நுவர எலிய (பிறைவேட்) லிமிட்டெட்
*நிறுவனத்தின் வியாபார பதிவு இலக்கம்* : பீவீ 98763
*பெயர் மாற்றப்பட்ட திகதி* : 2015.11.13
*பதிவு அலுவலகம்* : இல. 75, ஹயிட் பார்க் கோணர், கொழும்பு 2

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

நிர்வாக செயலாளர்

*12-516*

# ஏல விற்பனைகள்

## கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ – புத்தளம் கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (பதிவு இலக்கம் பீகியூ 116) மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம்–*

**அட்டவணை**

**வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், புத்தளம் கிரவட்ஸ் புத்தளம் நகரம் ஆராச்சிவில்லு கிராமத்தில் அமைந்துள்ள பாகுஸ் தோட்டக் காணியின் நில அளவையாளர் ஜே. ஏ. வீ. ராஜநாயகம் அவர்களால் தயாரிக்கப்பட்ட 2007.01.15 ஆந் திகதிய வரைபட இலக்கம் 3017ஏ இல் காண்பிக்கப்பட்ட லொட் 1.**

**காணியின் விஸ்தீரணம் :**

**பதினைந்து ஏக்கர் ஒரு றூட் முப்பத்தொரு பேர்ச்**
**(15ஏ. 1றூ. 31பே.)**

**இக்காணியில் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், தாவரங்கள் அனைத்தும் சேர்த்து.**

*(கடன் எடுத்த இலங்கைச் சட்டப்படி தாபிக்கப்பட்ட இலக்கம் 14, ஸ்பில் றோட், புத்தளம் என்ற விலாசத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள ஏ. எஸ். ஆர். வெஜிடபிள் ஓயில் கொம்ப்ளெக்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் மேற்படி காணியை கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ இற்கு ஈடுவைத்துள்ளது.)*

என்னால் மேற்சொல்லப்பட்ட காணி, அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் 2016, சனவரி மாதம் 14 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு**.- 2014.05.23 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், "லக்பிம", "த ஐலண்ட்" மற்றும் "வீரகேசரி" பத்திரிகைகளையும், ஏலவிற்பனை விளம்பரத்திற்காக 2014.12.26 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், 2014.12.16 ஆந் திகதியுடைய "லக்பிம", "த ஐலண்ட்" மற்றும் "வீரகேசரி" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**காணியைச் சென்றடையும் விதம்**.- கொமர்ஷல் பாங்க், புத்தளம் கிளை அருகில் இருந்து குருநாகல் றோட்டில் 2.8 கிலோ மீட்டர் சென்ற பிறகு இடதுபக்கம் ஆதனம் அமைந்துள்ளது.

**கொடுப்பனவு செலுத்தும் விதம்**.- வெற்றி பெற்ற கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) உள்ளூராட்சிமன்ற வரி 1% ;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5 % ;
(4) நொத்தாரிசு கட்டணம் 2,000 ரூபா ;
(5) இலிகிதர் கட்டணம் 500 ரூபா ;
(6) ஏலத்திற்காக செலவுசெய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் ;
(7) VAT வரி.

மிகுதி 90% ஏலத்திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பிரதான அலுவலகம் அல்லது புத்தளம் கிளையில் செலுத்த வேண்டும்.

*வேறு விபரங்களுக்காக*.- முகாமையாளர், கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ, இல. 116ஏ, குருநாகல் றோட், புத்தளம். தொலைபேசி இல. : 032-2266364-5 ; தொலைநகல் இல. : 032-2266366.

எல். பி. சேனாநாயக்க (சமாதான நீதவான்),
மூத்த உத்தரவுபெற்ற ஏலதாரர், விலைமதிப்பீட்டாளர்,
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 182,
3 ஆவது மாடி,
புதுக்கடை வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி/தொலைநகல் இல. 011-2445393.
மின்-அஞ்சல் : senaservice@sltnet.lk

*12-554*

**இலங்கை வங்கி**

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்*

கடன் தொடர்பு இல. 75166350

திரு. அபேசிங்ஹ வீரகோன் ஹெட்டிகே நிமல் கோமஸ், திருமதி நக்கவிட கன்கானமலாகே நிமல் காந்திலதா, செல்வி அபேசிங்ஹ வீரகோன் ஹெட்டிகே நிலக்ஷிகா கோமஸ், திரு. அபேசிங்ஹ வீரகோன் ஹெட்டிகே றுஷான் கோமஸ் ஆகியோர் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விற்பனை

இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2015.10.02 ஆந் திகதிய 1935 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2015.09.21 ஆந் திகதிய திங்கட்கிழமைய "டெய்லி நியூஸ்", "தினகரன்" மற்றும் "தினமின" ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதிவரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின்கீழ் அறவிடவேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் ரீ அன்ட் எச் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்ன அவர்களால் 2016.01.09 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் அறிவிக்கப் படுகின்றது.

**அட்டவணை**

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், ரத்மல கிழக்கு 844-B ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவில் அகலவத்த பிரதேச செயலகப் பிரிவில் அகலவத்த பிரதேச சபை எல்லைகளுள் பஸ்துன் கோரளை கிழக்கு மஹா பத்து தெற்கில் ரத்மலேயில் அமைந்த "நய்கொடகெலே" என அழைக்கப்படும் காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. ஜே. கே. அபேகோன் தயாரித்த 2011, செத்தெம்பர் 04 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 1457 இல் விபரித்த துண்டு A என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கு : T.P. 229339 மற்றும் F.V.P. 108 இல் துண்டுகள் 315, 299 மற்றும் 314 உம் ; கிழக்கு : F.V.P. 108 இல் துண்டு 314 மற்றும் 299 உம் ; தெற்கு: T.P. 397867 மற்றும் F.V.P. 108 இல் துண்டு 299F உம் ; மேற்கு: F.V.P. 108 இல் துண்டு 299F உம் மற்றும் T.P. 229339 எல்லைகளாகக்கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 1457 இன்படி எட்டு ஏக்கர் பத்து பேர்ச் (8ஏ. 0றூ. 10பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும்.

மேற்குறிப்பிட்ட வரைபடம்இல. 1457 இல் துண்டு A பின்வருமாறு விபரித்த F.V.P. 108 இல் துண்டு 299D ஒரு மீளளவை ஆகும்.

மேற்குறிப்பிட்டவாறு ரத்மலேயில் அமைந்த "நய்கொடகெலே" என அழைக்கப்படும் காணியின் துண்டு 299D என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கு : T.P. 229339 இல் காணியும் துண்டுகள் 315, 299 உம் மற்றும் 314 உம் ; கிழக்கு : துண்டு 299 உம்; தெற்கு : T.P. 397867 இல் காணியும் துண்டு 299F உம் ; மேற்கு: 299 மற்றும் T.P. 229339 உம் எல்லைகளாகக்கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 1457 இன் படி எட்டு ஏக்கர் பத்து பேர்ச் (8ஏ. 0றூ. 10பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது மத்துமக காணிப் பதிவகத்தில் E 371/172 இல் பதிவு செய்யப்பட்டது.

மேற்குறிப்பிட்ட ரத்மலேயில் அமைந்த "பெரவவததவல அல்லது அல்லஸ்ஸாவ" (கிழக்கு எல்லையில் 10 அடி அகலமான பாதைக்கு ஒதுக்கப்பட்டது) என அடையாளமிட்ட பகிரப்படாத காணியின் குறித்த காணித்துண்டு - வடகிழக்கிலும் கிழக்கிலும் : அரசாங்கக் காணியும் ; தெற்கு : சாக்கடையும் ; மேற்கு : பொலத்தவல கும்புரயும் எல்லைகளாகக் கொண்டு முப்பத்தெட்டு ஏக்கர் (38ஏ. 0றூ. 0பே.) விஸ்தீரணமுடையது. இது மத்துமக காணிப் பதிவகத்தில் E 357/74 இல் பதிவு செய்யப்பட்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ஜே. டீ. ஜீ. குணரத்ன,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
இங்கிரிய.

12-531

---

**இலங்கை வங்கி**

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்*

கொழும்பு 8, மாதா வீதி, இல. ஏ2 ஐச் சேர்ந்த டச் ரிசோர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டின் கடன் பொறுப்புகளுக்காக ஈடுவைத்த கற்பிட்டி டச் பே தீவில் அமைந்த ஆதனத்தின் விற்பனை

இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2015.11.20 ஆந் திகதிய 1942 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2015.11.09 ஆந் திகதிய "தினமின", "டெய்லி நியூஸ்" மற்றும் 2015.11.11 ஆந் திகதிய "தினகரன்" ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதிவரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின்கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 290, ஹவ்லொக் வீதி, கொழும்பு 05 என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் சொக்மன் மற்றும் சமரவிக்ரமவின் ஏலதாரர் 2016.02.02 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப் படுகின்றது.

**அட்டவணை**

1.1 வடமேல் மாகாணம் புத்தளம் மாவட்டம், கல்பிட்டிய பிரதேச செயலாளர் பிரிவு கல்பிட்டிய பிரதேச சபை எல்லைகளுள் முத்துவால் கிராமத்தில் அமைந்த "பூனைக்குடா தோட்டம், புளியந்தீவு, விடத்தை

முந்தல் தோட்டம், நாவலடி காணி, சின்ன பொன்னி வயல், பெரிய பொன்னி வாய்க்கால், விடத்தை குளம் மற்றும் விடத்தை முந்தல் பொன்னி வாய்க்கால் தோட்டம், பெரிய பொன்னி வாய்க்கால் காணி, பேய் பொல்தன் காணி பழைய வீட்டடி கண்டி, கோவிலடி தோட்டம், கோவிலடி காடு விடத்தை முந்தல், கங்காச்சி தோட்டம், சென் அன்தனி கோவிலடி தோட்டம், "வண்ணம் தோட்டம்" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ.எம். எஸ். அத்தநாயக்க தயாரித்த 2010.11.16 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 3781 இல் விபரித்த துண்டு 1B என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கு : ஓடையும் மேற்குறிப்பிட்ட வரைபடத்தில் துண்டு 1A உம் ; கிழக்கு : மேற்குறிப்பிட்ட வரைபடத்தில் துண்டு 1A உம் களப்பும் ; தெற்கு : வரைபடம் இல. 3215 இல் துண்டு 1 உம் சேகு மீரா நாச்சியாவும் ஏனையோரும் உரிமை கோரும் காணியும்; மேற்கு : சேகு மீரா நாச்சியாவும் ஏனையோரும் உரிமை கோரும் காணியும் டச் பே பாதையும் பேதுருப்பிள்ளையும் ஏனையோரும் உரிமை கோரும் காணியும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 3781 இன்படி முப்பது ஏக்கர் (30ஏ. 0றூ. 0பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும்.

மேற்குறிப்பிட்ட துண்டு 1B, கீழே விபரித்த காணியின் ஒரு பகுதி ஆகும்.

மேற்குறிப்பிட்ட முத்துவால் கிராமத்தில் அமைந்த புளியந்தீவு விடத்தை முந்தல் தோட்டம் நாவலடி காணி, சின்ன பொன்னி வயல், பெரிய பொன்னி வாய்க்கால், விடத்தை குளம் மற்றும் விடத்தை முந்தல், பொன்னி வாய்க்கால் தோட்டம், பெரிய பொன்னி வாய்க்கால் காணி, பேய்பொலதன் காணி, பழைய வீட்டடை கண்டி, கோவிலடி தோட்டம், கோவிலடி காடு, விடத்தை முந்தல், கங்காச்சி தோட்டம் என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. எம். எஸ். அத்தநாயக்க தயாரித்த 2007.12.18 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 3311 இல் விபரித்த துண்டு 2B என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கு : துண்டு 2A மற்றும் களப்பும்; கிழக்கு : களப்பும் துண்டு 2C உம் ; தெற்கு : களப்பும் வரைபடம் இல. 3215 இல் துண்டு 1 உம் சேகு மீரா நாச்சியா மற்றும் ஏனையோர் உரிமைகோரும் காணியும் ; மேற்கு: சேகு மீரா நாச்சியா மற்றும் ஏனையோர் உரிமை கோரும் காணியும் டச் பே வீதியும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 3311 இன் படி நாற்பது ஏக்கர் (40ஏ. 0றூ. 0பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது புத்தளம் காணிப் பதிவகத்தில் Q 186/19 இல் பதிவு செய்யப்பட்டது.

1.2 வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், கற்பிட்டி பிரதேச செயலாளர் பிரிவில் டச் பே 633 ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவில் கற்பிட்டி பிரதேச சபை எல்லைகளுள் முத்துவால் கிராமத்தில் அமைந்த புளியந்தீவு, விடத்தை முந்தல் தோட்டம், நாவலடி காணி, சின்ன பொன்னி வயல், பெரிய பொன்னி வாய்க்கால், விடத்தை குளம் மற்றும் விடத்தை முந்தல், பொன்னி வாய்க்கால் தோட்டம், பெரிய பொன்னி வாய்க்கால் காணி, பேய்போலதன் காணி, பழைய வீட்டடை கண்டி, கோவிலடி தோட்டம், கோவிலடி காடு, விடத்தை முந்தல், கங்காச்சி தோட்டம் என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. எம். எஸ். அத்தநாயக்க தயாரித்த 2013.08.11 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 4340 இல் விபரித்த துண்டு 2B2 என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கு : வரைபடம் இல. 3311 இல் துண்டு 2A யும் களப்பும் ; கிழக்கு : களப்பும் துண்டு 3311 இல் துண்டு 2C உம் ; தெற்கு : வரைபடம் இல. 3311 இல் வரைபடம் இல. 2C உம் களப்பும் துண்டு 2B1 உம் ; மேற்கு : துண்டு 2B1 மற்றும் வரைபடம் இல. 3311 இல் துண்டு 2A உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 4340 இன் படி பத்து ஏக்கர் (10ஏ. 0றூ. 0பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும்.

மேற்குறிப்பிட்ட துண்டு 2B2 கீழே விபரித்த காணியின் ஒரு பகுதி ஆகும்.

மேற்குறிப்பிட்ட முத்துவால் கிராமத்தில் அமைந்த புளியந்தீவு விடத்தை முந்தல் தோட்டம், நாவலடி காணி, சின்ன பொன்னி வயல், பெரிய பொன்னி வாய்க்கால், விடத்தை குளம் மற்றும் விடத்தை முந்தல், பொன்னி வாய்க்கால் தோட்டம், பெரிய பொன்னி வாய்க்கால் காணி, பேய்பொலதன் காணி, பழைய வீட்டடை கண்டி, கோவிலடி தோட்டம், கோவிலடி காடு, விடத்தை முந்தல், கங்காச்சி தோட்டம் என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. எம். எஸ். அத்தநாயக்க தயாரித்த 2007.12.18 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 3311 இல் விபரித்த துண்டு 2B என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கு : துண்டு 2A மற்றும் களப்பும்; கிழக்கு : களப்பும் துண்டு 2C உம் ; தெற்கு : களப்பும் வரைபடம் இல. 3215 இல் துண்டு 1 உம், சேகு மீரா நாச்சியா மற்றும் ஏனையோர் உரிமைகோரும் காணியும் ; மேற்கு: டர்ச் பே வீதியும் சேகு மீரா நாச்சியா மற்றும் ஏனையோர் உரிமை கோரும் காணியும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 3311 இன் படி நாற்பது ஏக்கர் (40ஏ. 0றூ. 0பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது புத்தளம் காணிப் பதிவகத்தில் Q 186/19 இல் பதிவு செய்யப்பட்டது.

1.3 வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், கற்பிட்டி பிரதேச செயலாளர் பிரிவில் டச் பே வசம் 633 ஆம் இலக்க கிராம உத்தியோகத்தர் பிரிவில் கற்பிட்டியில் முத்துவாலில் (முகத்து வாரம்) அமைந்த சாந்த "அந்தோனியார் தோட்டம்" என அழைக்கப்படும் காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. எம். எஸ். அத்தநாயக்க தயாரித்த 2008.10.07 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 3412 இல் விபரித்த துண்டு 1 என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. எம். எஸ். அத்தநாயக்க (வெஸ்ட் அக்ரோ புறொபர்ட்டி டெவலப்பேர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்) தயாரித்த வரைபடம் இல. 3312 இல் துண்டு 1 உம் ; கிழக்கு : களப்பு ; தெற்கு : மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 3312(வெஸ்ட் அக்ரோ புறொபர்ட்டி டெவலப்பேர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்) துண்டு 1 உம் ; மேற்கு : மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 3312 இல் (வெஸ்ட் அக்ரோ புறொபர்ட்டி டெவலப்பேர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்) துண்டு 1 உம் எல்லைகளாகக் கொண்டு ஒன்பது ஏக்கர் இரண்டு றூட் (9ஏ. 2றூ. 0பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது புத்தளம் காணிப் பதிவகத்தில் Q 35/ 141 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1.4 வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், கற்பிட்டி பிரதேச செயலகப் பிரிவில் கற்பிட்டிய பிரதேச சபை எல்லைகளில் டச் பே 633 ஆம் இலக்க கிராம அலுவலர் எல்லைகளுள் முத்துவால் கிராமத்தில் அமைந்த பூனைக்குடா தோட்டம், புளியந்தீவு, விடத்தை, முந்தல் தோட்டம், நாவலடி காணி, சின்ன பொன்னி வயல், பெரிய பொன்னி வாய்க்கால், விடத்தை குளம் மற்றும் விடத்தை முந்தல் பொன்னி வாய்க்கால், தோட்டம், பெரிய பொன்னி வாய்க்கால் காணி, பேய்பொலதன் காணி, பழைய வீட்டடி கண்டி, கோவிலடி தோட்டம், கோவிலடி காடு, விடத்தை முந்தல், கங்காச்சி தோட்டம் சென். அந்தனி கோவிலடி தோட்டம், வண்ணன் தோட்டம் என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ. எம். எஸ். அத்தநாயக்க தயாரித்த 2014.09.02 ஆந் திகதியிட்ட வரைபடம் இல.4609 இல் விபரித்த துண்டு 4A என அடையாளமிடப்பட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கு சொரி ஓடையும் ; கிழக்கு: சென். அந்தனி தேவாலயத்தின் காணியும் களப்பும் ; தெற்கு : ஜே. அல்பொன்ஜ் மிரண்டா உரிமைகோரும் காணியும் மேற்குறிப்பிட்ட வரைபடத்தில் துண்டு 3A உம் ; மேற்கு : மேற்குறிப்பிட்ட வரைபடத்தில் துண்டு 3A உம் சொரிஓடையும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 4609 இன் படி நாற்பத்திரண்டு ஏக்கர் (42ஏ. 0றூ. 0பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும்.

மேற்குறிப்பிட்ட காணித்துண்டு கீழே விபரித்த காணியின் ஒரு மீளளவை ஆகும்.

மேற்குறிப்பிட்ட முத்துவால் கிராமத்தில் அமைந்த பூனைக்குடா தோட்டம், புளியந்தீவு, விடத்தை, முந்தல் தோட்டம், நாவலடி காணி, சின்ன பொன்னி வயல், பெரிய பொன்னி வாய்க்கால், விடத்தை குளம் மற்றும் விடத்தை முந்தல், பொன்னி வாய்க்கால், தோட்டம், பெரிய பொன்னி வாய்க்கால் காணி, பேய்பொலதன் காணி, பழைய வீட்டடி கண்டி, கோவிலடி தோட்டம், கோவிலடி காடு, விடத்தை முந்தல், கங்காச்சி தோட்டம், சென். அந்தனி கோவிலடி தோட்டம், வண்ணன் தோட்டம் என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. எம். எஸ். அத்தநாயக்க தயாரித்த 2007.03.14 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 3215 இல் விபரித்த துண்டு 4 என அடையாளமிடப்பட்டு பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கு : சொரி ஓடையும் ; கிழக்கு : சென். அந்தனி தேவாலயத்தின் காணியும் களப்பும் ; தெற்கு : ஜே. அல்பொன்ஜ் மிரண்டா உரிமைகோரும் காணியும் மேற்குறிப்பிட்ட வரைபடத்தில் துண்டு 3 உம் ; மேற்கு : மேற்குறிப்பிட்ட வரைபடத்தில் துண்டு 3 உம் சொரிஓடையும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 3215 இன் படி நாற்பத்திரண்டு ஏக்கர் (42ஏ. 0றூ. 0பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது புத்தளம் காணிப் பதிவகத்தில் Q 96/177 இல் பதிவு செய்யப்பட்டது.

1.5 வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், கற்பிட்டி பிரதேச செயலகப் பிரிவில் டச் பே 633 ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவில் கற்பிட்டியில் முத்துவால் கிராமத்தில் அமைந்த பூனைக்குடா தோட்டம், புளியந்தீவு, விடத்தை, முந்தல் தோட்டம், நாவலடி காணி, சின்ன பொன்னி வயல், பெரிய பொன்னி வாய்க்கால், விடத்தை குளம் மற்றும் விடத்தை முந்தல், பொன்னி வாய்க்கால், தோட்டம், பெரிய பொன்னி வாய்க்கால் காணி, பேய்பொலதன் காணி, பழைய வீட்டடி கண்டி, கோவிலடி தோட்டம், கோவிலடி காடு, விடத்தை முந்தல், கங்காச்சி தோட்டம், சென். அந்தனி கோவிலடி தோட்டம், வண்ணன் தோட்டம் என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ. எம். எஸ். அத்தநாயக்க தயாரித்த 2014.09.02 ஆந் திகதியிட்ட வரைபடம் இல.4609 இல் விபரித்த துண்டு 3A என அடையாளமிடப்பட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கு: உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. எம். எஸ். அத்தநாயக்க தயாரித்த 2007.03.14 ஆந் திகதியிட்ட வரைபட இல. 3215 இல் துண்டு 5 உம் சொரி ஓடையும் இக் காணியின் துண்டு 4A உம் ஜே. அல்பொன்ஜ் மிரண்டா உரிமைகோரும் காணியும் ; கிழக்கு : களப்பும் ; தெற்கு : மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 3215 இல் துண்டு 2 உம் ஓடையும் PP போல் மற்றும் எம். ஐ. சேகு அலவ்தீன் ஆகியோர் உரிமைகோரும் காணிகளும்; மேற்கு: கடலும் எல்லைகளாகக் கொண்டு எண்பத்தாறு ஏக்கர் ஒரு றூட் பதினேழு பேர்ச்சஸ் (86ஏ. 1றூ. 17பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும்.

மேற்குறிப்பிட்ட காணித்துண்டு கீழே விபரித்த காணியின் ஒரு மீளளவை ஆகும்.

மேற்குறிப்பிட்ட முத்துவால் கிராமத்தில் அமைந்த பூனைக்குடா தோட்டம், புளியந்தீவு, விடத்தை, முந்தல் தோட்டம், நாவலடி காணி, சின்ன பொன்னி வயல், பெரிய பொன்னி வாய்க்கால் விடத்தை குளம் மற்றும் விடத்தை முந்தல் பொன்னி வாய்க்கால் தோட்டம், பெரிய பொன்னி வாய்க்கால் காணி, பேய்பொலதன் காணி, பழைய வீட்டடி கண்டி, கோவிலடி தோட்டம், கோவிலடி காடு விடத்தை முந்தல், கங்காச்சி தோட்டம், சென். அந்தனி கோவிலடி தோட்டம், வண்ணன் தோட்டம் என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ. எம். எஸ். அத்தநாயக்க தயாரித்த 2007.03.14 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 3215 இல் விபரித்த துண்டு 3 என அடையாளமிடப்பட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கு : இதன் துண்டு 5 உம் சொரி ஓடையும், இதன் துண்டு 4 உம் ஜே. அல்பொன்ஜ் மிரண்டா உரிமைகோரும் காணியும் ; கிழக்கு : களப்பும் ; தெற்கு : இதன் துண்டு 2 உம் ஓடையும் PP போல் மற்றும் எம். ஐ. சேகு அலவ்தீன் ஆகியோர் உரிமைகோரும் காணிகளும்; மேற்கு: கடலும் எல்லைகளாகக் கொண்டு எண்பத்தாறு ஏக்கர் ஒரு றூட் பதினேழு பேர்ச். (86ஏ. 1றூ. 17பே.)அதாவது 34.9473 ஹெக்டயாருக்குச் சமமான காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது புத்தளம் காணிப்பதிவகத்தில் Q 87/117 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ஜே. ஜீ. என். ஜயசுமன,
தொடர்பாடல் முகாமையாளர்.

இலங்கை வங்கி,
அறவிடல் பிரிவு,
இல. 4, இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு 01.

12- 599

---

## ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ —மாவனல்லை கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை

**மிகவும் பெறுமதிமிக்க விவசாயச் சொத்து ஏல விற்பனை**

**அரநாயக்க பிரதேச சபை எல்லைக்குட்பட்ட அம்பலகந்த கிராமத்தில் அமைந்துள்ள நாரங்கலவத்த எனும் காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. டீ. சிரிசூரிய என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1998.06.11 ஆந் திகதிய 1243 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 5 எனும் காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும்**

**(பரப்பளவு : 25 ஏக்கர் 27.4/6 பேர்ச்)**

*(இவ்வாதனம் நாணயக்கார அப்புகே ரிஷான் மதுசங்க நாணயக்கார மற்றும் நாணயக்கார அப்புகே தனபால ஆகியோர் கடப்பாடுடையவர்களாக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.)*

**ஆதனத்தை வந்தடைதல்.-** மாவனல்லை நகரத்திலிருந்து அரநாயக்க பாதையில் சுமார் 13 கி. மீ. தூரம் அரநாயக்க நகரத்திற்கு வந்து அங்கிருந்து அம்பலகந்த பாதைக்குப் பிரவேசித்து அந்தப் பாதையில் சுமார் 6 கி. மீ. தூரம் சென்று இடது பக்கமாகவுள்ள தோட்டப் பாதைக்குத் திரும்பி சுமார் 600 மீற்றர் சென்றவுடன் இப்பாதையின் எல்லையில் பாதையின் இடதுபக்கத்தில் இவ்வாதனம் அமைந்துள்ளது.

இவ்வாதனம் 2016.01.12 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2015.10.02 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2015.11.20 ஆந் திகதிய "டெயிலி மிரர்", "லக்பிம" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை.**- வெற்றிபெற்ற கொள்வனவாளர் ஏல விற்பனை முடிவில் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகளை ஏலவிற்பனையாளரிடம் ரொக்கப்பணமாக செலுத்துதல் வேண்டும் :-

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;
(2) பிரதேச சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) விற்பனை வரி ;
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் 2 1/ 2 % (நூற்றுக்கு இரண்டரை) ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;
(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் 500 ரூபா ;
(6) விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணம் 2,000 ரூபா.

கொள்முதலில் மிகுதி 90% இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்படவிருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ இற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.**- சிரேஷ்ட முகாமையாளர் (கடன் அறவிடுதல்), ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ, இல. 479, ரீ. பி. ஜயா மாவத்தை, கொழும்பு 10 உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. : 011-2661815, 011-2661816.

ஐ. டப்ளியூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம்பெற்ற
ஏல விற்பனையாளர்.

இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை, மாவில்மட,
கண்டி.
தொலைபேசி இல. : 081-2210595, 071-4755974, 071-8446374, 077-7761706.

12-616

---

### அமானா பேங்க் பீஎல்சீ – காலி கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை

### வசிப்பிடத்திற்கு/வியாபாரத்திற்கு/பண்டகசாலைக்குப் பொருத்தமான சொத்து ஏல விற்பனை

**மாத்தறை மாவட்டம், வெலிகம பிரதேச சபை எல்லைக்குட்பட்ட தெனிபிட்டிய கிராமத்தில் பொல்வத்து மோதர - தெனிபிட்டிய பாதையில் அமைந்துள்ள வெலிஹாரனதெனியேவத்த லொட் 1 வெலிஹாரனதெனியேவத்த லொட் பி, சீ, டீ, ஈ மற்றும் எப் எனும் தொடர் காணித்துண்டுகளுடன் லொட் 1 வெலிஹாரனதெனிய எனும் அலுத்தெனிய எனும் தவட்டகஹதெனிய லொட் 1, 2, 3, பெத்தகேவத்த லொட் ஏ, பெத்தேகேவிட லொட் பி, பெத்தேகே கும்புர லொட் சீ மற்றும் சீ1 எனும் காணிகளினாலான ஒன்றிணைக்கப்பட்ட காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் என். விஜேவீர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1982.06.02 ஆந் திகதிய 2068 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட காணித்துண்டும் மற்றும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும்.**

**(பரப்பளவு : 1ஏ. 2றூ. 8பே.)**

**லொட் இல. 1, 15, 16, 17, 18, 19, 20, 21 மற்றும் 22 எனும் பிரித்தெடுக்கப்பட்ட தொடர் காணித்துண்டுகளாகும்**

*(இவ்வாதனம் காலியில் அமைந்துள்ள நிலாம் ஸ்டோர்ஸ் எனும் பெயர் மகுடத்தின்கீழ் வியாபாரத்தை நடத்திச் செல்லும் எம். எச். எம். நிலாம் என்பவர் கடப்பாடுடையவராக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக அமானா பேங்க் பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.)*

**ஆதனத்தை வந்தடைதல்.**- மாத்தறை நகரத்திலிருந்து காலி பாதை ஊடாக பொல்அத்து மோதர சந்தி வரை வந்து வலதுபக்கமாகத் திரும்பி தெனிபிட்டிய பாதைக்குப் பிரவேசித்து அந்தப் பாதையில் சுமார் 3/ 4 கிலோ மீற்றர் தூரம் சென்றால் இப்பாதையின் வலதுபக்கத்தில் இவ்வாதனம் அமைந்துள்ளது.

இவ்வாதனம் 2016, சனவரி 07 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2015.11.06 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2015.11.06 ஆந் திகதிய "டெயிலி நியூஸ்", "தினமின" மற்றும் "தினகரன்" பத்திரிகைகளையும் பார்க்கவும். விற்பனை பற்றிய அறிவித்தலுக்கு 2015.12.18 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை.**- வெற்றிபெற்ற கொள்வனவாளர் ஏல விற்பனை முடிவில் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகளை ஏலவிற்பனையாளரிடம் ரொக்கப்பணமாக செலுத்துதல் வேண்டும் :-

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;
(2) பிரதேச சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) விற்பனை வரி ;
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் 2 1/ 2 % (நூற்றுக்கு இரண்டரை) ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;
(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் 750 ரூபா ;
(6) விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணம் 2,500 ரூபா.

கொள்முதலில் மிகுதி 90% இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்படவிருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.**- பிரதான சட்ட அலுவலர் (சட்டப் பிரிவு), அமானா பேங்க் பீஎல்சீ, இல. 480, காலி வீதி, கொழும்பு 03 உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. : 011-7756000.

ஐ. டப்ளியூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம்பெற்ற
ஏல விற்பனையாளர்.

இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை, மாவில்மட,
கண்டி.
தொலைபேசி இல. : 081-2210595, 071-4755974, 071-8446374, 077-7761706.

12-615

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.